# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.4<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | சதீஷ்குமார் |
| Father's Name | த/பெ.காசி |
| Village | நேசமணிநகர், முள்ளக்காடு |
| Taluk | |
| Age | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026.

**(2 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது நேசமணிநகர் முள்ளக்காடில் குடியிருந்து வருகிறேன். நான் JCB ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இதற்கு முன்பு பார்த்தது இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் காவல் நிலையம் சென்றபோது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அது முறையே **அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6**. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

போலிசார் விசாரணையில் கடந்த 22.04.2024ம் தேதி காலை 10.00 மணிக்கு தூத்துக்குடி - மதுரை பைபாஸ் ரோட்டில் FCI குடோன் அருகில் முத்தையாபுரம் காவல் நிலைய போலிசார் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த TN 76 AX 2246 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் போலிசாரை கண்டதும் தப்பி செய்ய முயன்றதாகவும் அவரை பிடித்து போலிசார் விசாரிக்க என் முன்னிலையிலும் காளிமுத்து முன்னிலையில் அவர் குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அன்றையதினம் 11.30 மணிக்கு தூத்துக்குடி - மதுரை பைபாஸ் ரோட்டில் FCI குடோன் அருகில் வைத்து முத்தையாபுரம் காவல் ஆய்வாளர் மேற்படி எதிரி ஆஜர் செய்த TN 76 AX 2246 என்ற இருசக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் இருவரும்

சாட்சிளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u> இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**